(5) அரசினர் தீர்மானம்.

மின்சார வாரியத்திற்கு ஒரு சமயத்தில் அதிகக் கடனாக இருக்கும் தொகையை முடிவு செய்யும் செயற்குறிப்பு குறித்து.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவர் அவர்களே, " 1948-ம் ஆண்டு மின்சாரம் (வழங்கல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 65-வது பிரிவின் (1) உட்பிரிவின்படி, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஒரு சமயத்தில் கடனாக நூற்று ஐம்பது கோடி ரூபாய் இருக்கலாம் என்று மேற்படி சட்டத்தின் அதே பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவின்படி முடிவு செய்யும் மாநில அரசின் செயற்குறிப்பு ஏற்கப்படலாம்" என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(2) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) வரவு-செலவுக் கூட்டத் தொடரில் பேரவை நிகழ்ச்சிகள் பற்றிய புள்ளி விவரங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கடந்த மார்ச் மாதம் 1-ம் தேதி துவங்கி நடைபெற்றுவரும் இந்தப் பேரவையின் கூட்டத் தொடர் இன்றோடு முடிவடைகிறது. பலமுறை காரசாரமான விவாதங்களும், குற்றச்சாட்டுகளும், எதிர் குற்றச்சாட்டுகளும் இருந்தாலும் விவாதங்கள் மிக அமைதியான சூழ்நிலையில் மிகவும் ஆக்கபூர்வமாக நடைபெற்றன. வெப்ப நிலைமை வெளியே இருக்கிறது. இது கோடை காலம். இருந்தாலும் வெப்பத்திற்கு பதிலாக இங்கே ஒளி ஊட்டுகிற விவாதங்களாகத்தான் அமைந்தன—கொஞ்ச நேரம் வெப்பம் சிறிது தலைகாட்டினாலும்—என்பதற்காக உண்மையிலே இந்த மாமன்றமும், இம் மாமன்றத்தின் பேரவைத் தலைவன் என்ற முறையில் நானும் ரொம்பவும் பெருமைப்பட்டுக் கொள்ளலாம்.

தமிழ் நாடு சட்டப் பேரவை எப்போதும் கண்ணியத்திற்கும், கட்டுப்பாட்டிற்கும், சட்டப் பேரவையின் உரிமைகளைப் பாதுகாப்பதிலும் பெயர்பெற்றதாகும். எந்தச் சூழ்நிலையிலும் அதற்கு ஊறு நேரிடாமல் இன்னமும் நல்ல வகையில் ப்ராாளுமன்ற ஜனநாயகத்தை உயர்த்துகிற முறையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நடந்து கொண்டது பாராட்டுக்குரியதாகும். ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களையும் எதிர்வரிசையில் உள்ளவர்களையும் இதற்காக நான் மனமாற பாராட்டுகிறேன்.